JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//79/2021 |
| | : | Prosecution P.W --1 |
| NAME | : | Ahamed |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 27.07.2022.

முதல் விசாரணை

நான் கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் எலெக்ட்ரிசன் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 21.01.2016 ம் தேதியன்று காலை 07.00 மணிக்கு என்னுடைய வீடு 57 அடியுடைய என்னுடைய இடத்தில் 52 அடியில் வீடு கட்டிவிட்டு 5 அடி பாதை போட்டுள்ளேன். அப்போது என்னுடைய இடத்தில் ஆழ்துளை கிணறு போட்டேன். அப்போது எதிரிகள் அனைவரும் என்னுடைய வீட்டு கேட்டை உடைத்து வந்து என்னை கீழே தள்ளி தேவிடியா மவனே என்று பேசிக்கொண்டு, கொலை செய்து விடுவேன் என்று மிரட்டினார்கள். போர் போட்டால் கொன்று விடுவேன் என்று எதிரிகள் மிரட்டியதால் நான் ஜமாத்தில் புகார் செய்தேன். ஜமாத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் நான் என் உயிருக்கு பயந்து போய் இரவு 09.00 மணிக்கு கடையநல்லூர் காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுத்தேன்.அந்த புகார் மனு என்னிடம் காட்டப்படுவதுதான், அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு அ.சா.ஆ,1 ஆக குறியிடு செய்யப்படுகிறது . இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//79/2021 |
| | : | Prosecution P.W --2 |
| NAME | : | Mouthu kani |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 27.07.2022.

முதல் விசாரணை

நான் கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் கோழி வியாபாரம் செய்து வருகிறேன். புகார்தாரர் என் தம்பி ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 21.01.2016 ம் தேதியன்று காலை 07.30 மணிக்கு எங்கள் இடத்தில் எங்களுக்காக போர் போடும் போதும் நான் தற்செயலாக வீட்டிற்கு வந்து பார்க்கும் போது என் தம்பி அங் கு இருந்தார். அப்போது ஆஜர் எதிரிகள் அனைவரும் என் தம்பியையும், என்னையும் தேவிடியாமவனே, கூதிமவனே என்று கெட்ட வார்த்தைகளால் பேசிக்கொண்டு அடிக்க வந்தார்கள். போர் போட விடாமல் நிறுத்தி விட்டார்கள். நாங்கள் அது குறித்து ஜமாத்தில் சொல்லும் போது அவர்கள் கேட்கவில்லை என்பதால் நாங்கள் உயிருக்கு பயந்து போய் கடையநல்லூர் காவல் நிலையத்தில் சென்று என் தம்பி புகார் கொடுத்தார் . இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//79/2021 |
| | : | Prosecution P.W --3 |
| NAME | : | Abdul Kadhar |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 27.07.2022.

முதல் விசாரணை

நான் கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் ஸ்டிக்கர் கடை வைத்து நடத்தி வருகிறேன். புகார்தாரர் அகமதுவை தெரியும், ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கும் போது எதுவும் எனக்கு தெரியாது என்று சொன்னேன்.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 21.11.2016 ம் தேதியன்று காலை 07.00 மணியளவில் புகார்தாரர் அகமது வீட்டில் போர் போட்டார்கள் என்றும்,அதை ஆஜர் எதிரிகள் தங்களுடைய இடத்தில் போர் போடுவதாக போர் போடுவதை தடுத்து கெட்ட வார்த்தைகளால் பேசியதாகவும், அனைவரும் சட்ட விரோதமாகவும் ஒன்றுக்கூடி அகமது வீட்டில் நுழைந்ததாகவும், அதன் பின்பு எதிரிகள் அனைவரும் சாட்சி அகமதுவுக்கு கொலை மிரட்டல் விடுத்தாகவும் அது குறித்து நடவடிக்கை எடுக்க அ.சா.1 அகமது புகார் கொடுத்தார் என்று போலிசார் விசாரணையின் போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை